வளன்ஆயம்
தமிழாய்வுத்துறை
தூய வளனார் கல்லூரி [தன்னாட்சி]
திருச்சிராப்பள்ளி- 620002

# கி.ரா.வின் ‘கிடை’ நாவலில் இடையர்களின் வாழ்வியல்

**பேரா.சி.பாக்கிய செல்வரதி**
உதவிப்பேராசிரியர், தமிழாய்வுத்துறை,
தூய வளனார் கல்லூரி, திருச்சிராப்பள்ளி-620002

**ஆய்வுச்சுருக்கம்:**

இலக்கியம் மக்களின் அன்றாட வாழ்வியலை எடுத்துரைக்கும் கருவியாகும். தற்கால இலக்கியங்கள் நடப்பு நிகழ்வுகளையும், மக்களின் இயல்புகளையும் எடுத்துரைக்கின்றன. அந்த வகையில் கி.ராஜநாராயணன் எழுதிய ‘கிடை’ நாவல் இடையர்களின் வாழ்வியலை படம்பிடித்து காட்டுகிறது. இடையர்களை ஆயர் என்றும் அழைப்பர். சங்க காலம் முதல் முல்லைநில மக்களாக இடையர்கள் இருந்துள்ளனர். மேய்ச்சலோடு கூடிய வேளாண்மையை மேற்கொண்டனர். மேய்ச்சலில் ஈடுபடுவோர் கீதாரி போன்ற பெயரை வைத்துள்ளனர். நிறம் மற்றும் பேய் பிசாசுகளிடம் நம்பிக்கை வைத்தவர்களாக இருந்தனர். தங்களுக்கென்று தனி மருத்துவத்தை வைத்திருந்தனர். கிடை நாவல் இடையர்களின் வாழ்வியலை நன்கு படம் பிடித்துக் காட்டுகிறது.

**கலைச்சொற்கள்:**

கீதாரி, கிடை, கறுவி, கொச்சைக்கிடா அழிப்பு, புஞ்சை.

## முன்னுரை:

மக்களுடைய பழக்கவழக்கங்கள், நம்பிக்கைகள், பண்பாடு ஆகியவற்றை நாவல்கள் எடுத்துரைக்கின்றன. கி.ராஜநாராயணன் அவர்கள் கரிசல் வட்டார நாவல்களின் தந்தை எனப்படுகிறார். இவரது நாவல்கள் அன்றாட மக்களின் வாழ்வியலை எடுத்துரைப்பனவாக அமைகின்றன. இடையர்கள் ஆடுகளை மேய்ப்பவர்கள் ஆவர். இவர்கள் தங்களுக்கென்று தனி மொழியையும், நம்பிக்கைகளையும் வைத்திருப்பவர்களாகத் திகழ்கின்றனர். தனித்துவத்தோடு திகழும் இடையர்களின் வாழ்வியலைக் ‘கிடை’ நாவல் வழி விளக்குவதே இக்கட்டுரையின் நோக்கமாகும்.

**இடையர் விளக்கம்**

இடையர் என்பவர் ஆடு, மாடுகளை மேய்க்கும் தொழிலைச் செய்யக் கூடியவர் எனலாம். இவர்கள் சங்க காலம் தொட்டே வாழ்ந்து வருகின்றனர் என்பதை இலக்கியங்கள் உணர்த்துகின்றன. “கிடை என்பது கால்நடைக் கூட்டம் என்று பொருள். அதற்கு உரியவர் கிடையர் என அழைக்கப்பெற்று நாளடைவில் அது இடையர் என்று மாறியது” என சி.ஈ.இராமச்சந்திரன் குறிப்பிடுகிறார். (வயஅடைலயனயளள.டிடழபளிழவ.உழஅ)
“செல்வம் வாழ்க்கை நிலை ஆகியவற்றில் தலையாயவராய் உள்ளவர்க்கும் நாள்தோறும் உழைத்து வயிறு வளர்க்கும் கடையருக்கும் இடைப்பட்டவரே இடையர்” என்று மொ.அ.துரை அரங்கசாமி குறிப்பிடுகிறார். (வயஅடைலயனயளள.டிடழபளிழவ.உழஅ) முல்லை நிலத்தில் வாழ்ந்தவர்களே இடையர் ஆவர்.

தொல்காப்பியர், முல்லைநில மக்களைக் குறிப்பிடும் போது,

“ஆயர் வேட்டுவர் ஆடூஉத் திணைப் பெயர்
ஆவயின் வருஉம் கிழவரும் உளர்

என்று குறிப்பிடுகிறார். இதன் மூலம் சங்க இலக்கியத்தில் இடையர் ஆயர் என்றழைக்கப்பட்டனர் என்பதை அறியமுடிகிறது. இந்த நூற்பாவிற்கு உரை எழுதிய நச்சினார்க்கினியர் ஆயருடன் சேர்த்து இடையர், கோவலர், பொதுவர் என்றும் பெண் பாலில் ஆய மகளிர், ஆய்ச்சியர், இடைச்சியர், கோவித்தியர், பொதுவியர் என்றும் கூறியுள்ளார்.

**வேறுபெயர்கள்:**

இடையர்கள் பல்வேறு பெயர்களில் அழைக்கப்படுகின்றனர். இவர்களைக் கோவலர்கள் என்று நெடுநல்வாடை கூறுகிறது. அம்பலகாரர், கரையாளர், கீதாரி, கோன் அல்லது கோனார், சேர்வைதாஸ், நம்பி, நாயுடு, பிள்ளை, மணியக்காரர், மந்திரி அல்லது மந்தடி, மன்றாடியர், யாதவர், ரெட்டி, இடையர் போன்ற பெயர்களில் அழைக்கப்படுகின்றனர். இவர்களைக் கோத்திரம் அடிப்படையில் கல்கட்டி இடையர், நார்கட்டி இடையர், பால்கட்டி, பஞ்சாரம்கட்டி, சிவியர் சோழியாடு, சாம்பார் இராமக்காரர், பூச்சுக்காரர், கொக்கிக்கட்டி என்று வகைப்படுத்துவர். (வயஅடைலயனயளள.டிடழபளிழவ.உழஅ)

**தொழில்:**

இடையர்கள் முல்லை நிலமாகிய காட்டுப்பகுதியில் வாழ்ந்ததாக சங்க இலக்கியம் குறிப்பிடுகிறது. இளம்பூரணர் இவர்களது தொழிலாக கால்நடைகளை மேய்த்தல் என்று குறிப்பிடுகிறார். (தொல்காப்பியம் - பொருளதிகாரம், இளம்பூரணம், கழக வெளியீடு, சென்னை, 1969 ப.16) நச்சினார்க்கினியர் கால்நடைகளை மேய்த்தல், சிறுதானியப் பயிர்களிடையே களையெடுத்தல், தானியக் கதிர்களை எருமைகள் கொண்டு போரடித்தல் என்று கூறுகிறார். (சி.கணேசையர் (பதிப்) தொல்காப்பியம் - பொருளதிகாரம், நச்சினார்க்கினியம்,

திருமகள் அழுத்தகம் சுண்ணாகம் 1948, ப.58) முல்லை நில மக்களாகிய இடையர்கள் மேய்ச்சலோடு வேளாண்மையையும் சேர்த்தே செய்திருக்கிறார்கள்
நற்றிணை 121 ஆவது பாடலில் வரும் விதையா மற்றும் முதையல் என்ற சொற்கள் மேய்ச்சல்காரர்களே உழவர்களாக விளங்கினர் என்பதை எடுத்துரைக்கிறது. (நற்றிணை நானூறு மூலமும் உரையும், கழக வெளியீடு, சென்னை 1956, பா.121) மேலும் நற்றிணை 266, 289 அகநானூறு 194, 394 ஆகிய பாடல்களில் இடையர்கள் வேளாண்மை செய்த செய்திகள் இடம்பெறுகின்றன. எனவே முல்லைநில மக்களாகிய இடையர்கள் மேய்ச்சலோடு வேளாண்மையையும் சேர்த்தே செய்தமையை அறிய முடிகிறது.

**ஆட்டின் வகை:**

இடையர்கள் பலவகையான ஆடுகளை மேய்த்தமையைக் கிடை நாவல் எடுத்துரைக்கிறது. செம்மறி ஆடு, வெள்ளாடு என்று மட்டுமே அறிந்தவர்களுக்கு ஆட்டின் வண்ணம் அடிப்படையில் பல பெயர்களை கிடை நாவல் விளக்குகிறது. செவ்வாடு, அரியாடு, கருங்காத்து, வெள்ளை, வெங்காலாடு, மறை, போர், கரும்போர், மூளி, தாலி, கூளி, கறுவி, ராயாடு, சென்றாயாடு, கரிசையாடு, கண்ணாடிப்போர், கிடா, சுட்டி, கொச்சைக்கிடா, பூவால், பால்கன்னி, மொட்டை உச்சிக் கொம்பு, மச்சை, குரா, துடை, மாடக்கொம்பு, குருட்டாடு, ஓங்கோல், புளியம்போர் என்று கிட்ணக்கோனார் வாயிலாக கிடை நாவல் எடுத்துரைக்கிறது.

**மேய்ச்சல் தொழில்:**

பல வகையான தொழில்கள் இருப்பினும் ஆடு, மாடுகளை மேய்த்தல் என்பது எளிய காரியம் அன்று. கீதாரி என்று இடையர்களுக்குரிய பெயராக இருப்பினும் அதற்கு தனிப் பொருள் உண்டு. ஆடுகளைக் கிடைபோடுவதற்குத் தேர்ந்தெடுக்கப்பட்ட ஒரு தலைவனே கீதாரி ஆவார். (கிடை, கி.ராஜ நாராயணன், காலச்சுவடு பப்ளிகேஷன்ஸ், நாகர்கோவில் 2022 9ம் பதிப்பு, ப.14) 'கிடை'க்கு என்று தனிச்சட்டங்கள் உண்டு. ஆட்டுக்குட்டிகளின் கூடுகளை முறைப்படுத்தி வைப்பதற்கு வட்டம் என்று பெயர். இடையர்கள் யாரும் சட்டத்தை மீறக் கூடாது. கிடைக்காரர்களுக்கு என்று தனி மொழியே உண்டு. ஆண்டின் நிறத்தை வைத்து தங்களுடைய ஆடுகளை பாங்கு செய்து கொள்வார்கள். (கிடை, கி.ராஜ நாராயணன், காலச்சுவடு பப்ளிகேஷன்ஸ், நாகர்கோவில் 2022 9ம் பதிப்பு, ப.15) விளைச்சல் நிலங்களில் கிடையைப் போடுவர். கிடைக்கூலியாக தானியத்தைப் பெற்றுக் கொண்டு பங்கீடு செய்து கொள்வர். (கிடை, கி.ராஜ நாராயணன், காலச்சுவடு பப்ளிகேஷன்ஸ், நாகர்கோவில் 2022 9ம் பதிப்பு, ப.14)

**சாதி வேறுபாடு:**

தொழில் வாரியான வகுப்புகள் இருந்தன. தொழில் மாறலாம் தீண்டாமை இல்லை. பின்பு தொழிலை வாரிசாக செய்யத் தொடங்கினர். எனவே வேறுபாடுகள் உருவாகி தீண்டாமை உருவானது.
சாதி என்பது இறைவனால் உருவாக்கப்பட்ட அமைப்பு என்று ரிக் வேதம், மனுதர்மம், பகவத்கீதை ஆகியவை கூறுகின்றன. சாதிக்கும் மதத்திற்கும் தொடர்பு இல்லை என்றும் சமுதாய அமைப்பே சாதியை உருவாக்கியது என்றும்

விவேகானந்தர் கூறுவார். ஒரே சாதிக்குள் நடைபெறும் அகமண முறையே சாதியின் தோற்றத்திற்கு காரணம். அவற்றை மாற்ற கலப்பு மணமே சிறந்தது என்று அம்பேத்கர் கூறுவார்.

கி.ரா அவர்கள் தமது ‘கிடை’ நாவலில் பல இடங்களில் சாதி வேறுபாட்டைக் கூறுகிறார். செவனி, எல்லப்பன் மற்றும் லகுவணக்கவுண்டர் ஆகியோர் ஒன்றாகச் சென்று ஆடுமேய்ப்பர். எல்லப்பன் கவுண்டருக்குக் காது கேட்காததைக் கிண்டல் செய்வான். அதை கேட்கும் போது செவனிக்குச் சிரிப்பு வரும் ”ஒரு பள்ளி தன்னைப் பார்த்து சிரிக்கலாச்சா என்று கவுண்டர் வாய்க்கு வராத கெட்டவார்த்தைகளால் செவனியை ஆத்தா அக்கா அம்மா என்று ஏசுவார்”.(கிடை, கி.ராஜ நாராயணன், காலச்சுவடு பப்ளிகேஷன்ஸ், நாகர்கோவில் 2022 9ம் பதிப்பு, ப.37) மேலும் எல்லப்பனின் காலில் முள் தைத்துவிட்டது. எனவே செவனி அதை தனது வாயால் கவ்வி எடுக்கவா? என்று கேட்கிறாள். உடனே எல்லப்பன் ”நீ பள்ளி என்னைத் தொடலாமா?” (கிடை, கி.ராஜ நாராயணன், காலச்சுவடு பப்ளிகேஷன்ஸ், நாகர்கோவில் 2022 9ம் பதிப்பு, ப.38) என்று கேட்கிறான்.

இருப்பினும் இருவருக்கும் இடையே காதல் மலர்கிறது. இருமனங்களும் இணைந்து பேசுகையில் ஆடுகள் பயிரை மேய்ந்து விடுகின்றன. ஆட்டின் தவறைக் கண்டுபிடிக்க முயலுகையில் இவர்களின் காதலை எல்லப்பனின் தாத்தா அறிந்து விடுகிறார். எனவே. எல்லப்பனுக்கு யாருக்கும் தெரியாமல் திருமணம் ஏற்பாடு செய்யப்படுகிறது. அவர்கள் முறைப்படி இரண்டு பெண்களைத் திருமணம் செய்யவேண்டும். “எல்லப்பனுக்கு இரண்டு பெண் ஜாதிகள் ஒன்று சடங்கான பெண், இன்னொன்று சடங்காகும் பருவத்திலுள்ள பெண்.” (கிடை, கி.ராஜ நாராயணன், காலச்சுவடு பப்ளிகேஷன்ஸ், நாகர்கோவில் 2022 9ம் பதிப்பு, ப.59) செவனிக்கு எல்லப்பனின் திருமணம் பற்றிய செய்தி தெரியவில்லை. காட்டிலேயே வயதிற்கு வந்து வீட்டிற்கு அழைத்துச் செல்லப்படுகிறாள். மயக்கம் தெளிந்து பார்க்கையில் எல்லப்பனின் திருமண ஊர்வலத்தைக் கண்டு பித்து பிடித்தவள் போல் இருக்கிறாள். என்வே காத்து கருப்பு அண்டியதாக நினைத்து கோடங்கிகாரரை அழைத்து பேய் ஓட்டும் நிகழ்வு நடத்தப்படுகிறது. “எனவே எருக்கம் விளாரினால் அடித்துக் கொண்டிருந்தார்கள் யார் நீ சொல்லு என்று கோடாங்கிக்காரன் அவளை அடித்துக் கொண்டே கேட்டான்” (கிடை, கி.ராஜ நாராயணன், காலச்சுவடு பப்ளிகேஷன்ஸ், நாகர்கோவில் 2022 9ம் பதிப்பு, ப.60) செவனியின் மன உணர்வை யாரும் உணரவில்லை. அவளின் காதலுக்குத் தடையாக இருந்தது சாதி மட்டுமே.

**நம்பிக்கை:**

கிராமத்தில் வாழ்ந்தாலும் நகரத்தில் வாழ்ந்தாலும் மக்களிடையே பல நம்பிக்கைகள் உள்ளன. கிடை நாவலில் பல இடங்களில் மக்களுடைய நம்பிக்கை இடம்பெற்றுள்ளது. பொதுவாக பேய் பற்றிய நம்பிக்கை மிகவும் அதிகமாகவே உள்ளது. நண்பகல் மற்றும் நள்ளிரவு நேரத்தில் பேய்கள் நடமாடும் என்பது நம்பிக்கை. பேய்கள் அண்டாமல் இருக்க கையில் இரும்பு வைத்திருப்பர். கிடை நாவலில் “ராமசுப்பா நாயக்கர் எப்பொழுதும் தமது இடதுகைப் பெருவிரலில் ஒரு இரும்பு வளையத்தை மோதிரமாகப் போட்டுக் கொண்டிருப்பார். பேய் பிசாசுகள்

அந்தி சந்தி நேரங்களில் தன்னை அணுகாது என்ற நினைப்பு.” (கிடை, கி.ராஜ நாராயணன், காலச்சுவடு பப்ளிகேஷன்ஸ், நாகர்கோவில் 2022 9ம் பதிப்பு, ப.11)

கொச்சைக்கிடா என்பது பிறவியிலேயே விதையில்லாத கிடா ஆகும். இது எளிதில் கிடைப்பதில்லை. இது ஒருவருக்குக் கிடைப்பது அதிஷ்டம் என்றும் நம்பினர். “கிட்ணக்கோனாருக்கு தம்முடைய அதிர்ஷ்டமெல்லாம் இந்தக் கொச்சைக் கிடாயினால் தான் வந்தது என்று நினைப்பு.” (கிடை, கி.ராஜ நாராயணன், காலச்சுவடு பப்ளிகேஷன்ஸ், நாகர்கோவில் 2022 9ம் பதிப்பு, ப.18)

நிறம் பற்றிய நம்பிக்கை மக்களிடையே நிலவியதைக் கிடை நாவல் கூறுகிறது. “கோபால் நாயக்கர் உம்புக்கு மேல் பச்சை நிற உல்லன் போர்வையைப் போர்த்திக் கொண்டிருப்பார். பச்சை நிறம் தனக்கு அதிர்ஷ்டம் கொடுப்பது என்று நம்புகிறவர்.” (கிடை, கி.ராஜ நாராயணன், காலச்சுவடு பப்ளிகேஷன்ஸ், நாகர்கோவில் 2022 9ம் பதிப்பு, ப.18)

அளவுக்கு அதிகமாக பக்தியில் தன்னை ஈடுபடுத்திக் கொண்டு பக்திமானாக திகழ்பவர்களும் உண்டு. தனக்கு ஏற்படும் நோய்க்கு மருத்து எதுவும் எடுத்துக் கொள்ளாமல் கடவுளின் திருநாமத்தை உச்சரித்தாலே குணமாகும் என்று கூறுபவர்களும் உண்டு. அப்படிப்பட்ட குணத்தோடு கிடை நாவலில் ராமக்கோனாரும் இடம்பெறுகிறார். “அவருக்கு வயித்து வலி வரும்போது திருச்செந்தூர் இருக்கும் திசையை நோக்கி முருகா என்று வணங்கி நிலத்திலுள்ள மண்ணை பூசுவார், வயிற்று வலி சரியாகிவிடும்.” (கிடை, கி.ராஜ நாராயணன், காலச்சுவடு பப்ளிகேஷன்ஸ், நாகர்கோவில் 2022 9ம் பதிப்பு, ப.41)

**மருத்துவம்:**

உணவே மருந்து என்று கூறுவர். அத்தகைய உணவை மேற்கொண்ட கிராமத்தைக் ‘கிடை’ நாவல் எடுத்துரைக்கிறது. ஆட்டுப் பாலில் உள்ள மருத்துவத்தைக் கிடை நாவல் எடுத்துரைக்கிறது, வயிற்றுகோளாறு உள்ள குழந்தைகளுக்கு வெள்ளாட்டு வயிற்றினுள்ளிருந்து இழுத்து அசைபோடும் உதவியை கறந்த பாலுடன் உடனே கலந்துக் கொடுத்தால் சரியாகும். (கிடை, கி.ராஜ நாராயணன், காலச்சுவடு பப்ளிகேஷன்ஸ், நாகர்கோவில் 2022 9ம் பதிப்பு, ப.13) கண்வலிக்கு வெள்ளாட்டம் பாலை காம்பைப் பிடித்து நோயுள்ள கண்ணில் பீய்ச்சினால் கண்வலி குணமாகும். (கிடை, கி.ராஜ நாராயணன், காலச்சுவடு பப்ளிகேஷன்ஸ், நாகர்கோவில் 2022 9ம் பதிப்பு, ப.13)

ஆவாரம் செடி மருத்துவ குணமுடையது. அதன் பூவைக் கஷாயம் செய்து குடித்துவர உடல்சூடு, தோல் வறட்சி நீங்கும். ஆவாரம் பட்டை நீரழிவு நோய்க்கு அருமருந்தாகும். ஆவாரம் பூவின் மொட்டை குழந்தைகளுக்கும் கொடுக்கலாம். (கிடை, கி.ராஜ நாராயணன், காலச்சுவடு பப்ளிகேஷன்ஸ், நாகர்கோவில் 2022 9ம் பதிப்பு, ப.29)

பலருக்குப் பல்வலி மற்றும் பல் எப்போதும் மஞ்சள் நிறத்திலேயே காணப்படும். அதற்கான மருந்தைக் கிடை நாவல் எடுத்துரைக்கிறது. ”நிதமும்

நாயுருவி வேரினால் பல் தேய்ப்பதனால் பற்கள் வெளுப்பாகவும் சுத்தமாகவும் இருக்கும்". (கிடை, கி.ராஜ நாராயணன், காலச்சுவடு பப்ளிகேஷன்ஸ், நாகர்கோவில் 2022 9ம் பதிப்பு, ப.36)

**தாது வருட பஞ்சம்:**

தென் இந்தியாவில் வந்த மிகப்பெரிய பஞ்சத்தில் ஒன்று தாது வருடப்பஞ்சம். 1876 ஆம் ஆண்டு முதல் 1878 ஆம் ஆண்டு வரை அன்றைய சென்னை மாகாணத்தில் கடும் பஞ்சம் ஏற்பட்டது. எல்நீனோ பருவநிலை மாற்றத்தால் பருவமழை பொய்த்தது. எனவே விளைச்சல் குறைந்தது. ஏற்றுமதியும் குறைந்தது. விதை நெல்லையை உட்கொள்ளும் நிலைக்கு மக்கள் தள்ளப்பட்டனர். நெற்களஞ்சியமான தஞ்சையிலும் பட்டினி சாவுகள் ஏற்பட்டன. கிட்டத்தட்ட 52 முதல் 55 லட்சம் பேர் மாண்டனர். இந்தப் பஞ்சம் பற்றி கிடை நாவல் எடுத்துரைக்கிறது. இடைக்காட்டு சித்தர் தாது வருடப் பஞ்சத்தை முன்பே அறிந்து ஆடுகளை ஆவாரம் பூவை உண்ண பழக்குகிறார். பஞ்சத்தால் ஆவாரம் செடியைத் தவிர மற்றது வாடியது. வரகால் ஒரு கோட்டையைக் கட்டினார். எனவே பஞ்ச காலத்தில் வரகை சமைத்து ஆட்டுப் பாலோடு உண்டு பஞ்சத்தைப் போக்கியதாக கிடை நாவல் எடுத்துரைக்கிறது. (கிடை, கி.ராஜ நாராயணன், காலச்சுவடு பப்ளிகேஷன்ஸ், நாகர்கோவில் 2022 9ம் பதிப்பு, பக்.30, 31)

**முடிவுரை:**

கரிசல் காட்டு மக்களின் வாழ்வியலை எடுத்துரைக்கும் நாவலாக 'கிடை' அமைந்துள்ளது. கிராமத்து மருத்துவம் முக்கியமாக ஆவாரம் செடியில் உள்ள மருத்துவ குணத்தை நன்கு எடுத்துரைக்கிறது. பிசாசு பற்றிய நம்பிக்கைக் காலம் காலமாக உள்ளது. அதிஷ்டநிறம் பற்றியும் நம்பிக்கை மக்களிடையே உள்ளதை அறிய முடிகிறது. சாதிய வேறுபாட்டால் இரு மனங்கள் பிரிந்ததையும் நன்கு எடுத்துரைக்கிறது. தாது வருடப் பஞ்சத்தில் இடைக்காட்டு சித்தரின் அறிவு கூர்மையை அறிய முடிகிறது. கிடை நாவல் இடையர்களின் வாழ்வியலை நன்கு எடுத்துரைக்கிறது.

**உதவிய நூல்கள்:**


1.இளம்பூரணம், தொல்காப்பியம் - பொருளதிகாரம், கழக வெளியீடு, சென்னை, 1969.

2.கணேசையர் சி, நச்சினார்க்கினியம், தொல்காப்பியம் பொருளதிகாரம், திருமகள் அழுத்தகம் சுண்ணாகம், 1948.

3.கார்த்திகேசு சிவத்தம்பி, பண்டைத் தமிழ்ச் சமூகம், நியூ செஞ்சுரி புக்ஹவுஸ், சென்னை, 2010.

4.ராஜநாராயணன் கி, கிடை, காலச்சுவடு பப்ளிகேசன், நாகர்கோவில், 2022.

5.விசுவநாதன் அ, (ப.ஆ), நற்றிணைநானூறு மூலமும் உரையும், கழக வெளியீடு, சென்னை, 1956.

6.விசுவநாதன் அ, (ப.ஆ), அகநானூறு மூலமும் உரையும், கழக வெளியீடு, சென்னை.

7. https://tamilyadavs.blogspot.com